DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
RAMESWARAM
**STC.No.468/2016**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | PW 3 | Caste | : | |
| Name | : | பொந்துமுனியாண்டி | Age | : | |
| FN. | : | | Occupation | : | |
| Village | : | | | | |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 01st day of November 2022.
01.11.2022.

முதல் விசாரணை:-

1. நான் தமிழ்நாடு காவல்துறையில் சிறப்பு சார்பு ஆய்வளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று கீழக்கரையில் வசித்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். எதிரிகளையும் தெரியும். கடந்த 02.03.2014-ம் தேதி காலை 10 மணிக்கு ஜெட்டியில் பாதுகாப்பு பணியில் நானும், சிறப்பு சார்பு ஆய்வாளர்கள் நடராஜன் மற்றும் ராமசந்திரன் ஆகியோர் இருந்தபோது NSK வீதியில் தேவர் சிலை முன்பாக மீனவர் சங்கத் தலைவர் ஜேசுராஜா தலைமையில் 10 நபர்கள் சாலை மறியலில் ஈடுபட்டுக்கொண்டு இருந்தார்கள்.

2.தகவல் அறிந்து நாங்கள் அங்குசென்று அவர்களை கலைந்து செல்லுமாறு கூறினோம். அவர்கள் போக மறுத்தால் எங்களுடன் இருந்த சிறப்பு சார்பு ஆய்வாளர் நடராஜன் அவர்கள் ஆய்வாளரிடம் புகார் கொடுத்தார். வழக்கு பதிவு செய்ய ஆய்வாளருக்கு நான் உதவியாக இருந்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.